MINISTRY OF MANPOWER

ACE

# CONNECT *with* ACE

## வெளிநாட்டு ஊழியர்களுக்கா
## மாதாந்திர மின் செய்திமடல்



ஆகஸ்ட்
2023




### இந்த இதழில்:

அரிசி பற்றிய அடிப்படை விஷயங்களைத் தெரிந்து செயல்படுங்கள்!

நிகழ்வின் சிறப்பம்சங்கள்

வன்முறையில் ஈடுபடும் முன் ஒருமுறைக்கு இருமுறை யோசியுங்கள்!

# அரிசியைப் பற்றிய அடிப்படை விஷயங்களைத் தெரிந்துக்கொண்டு செயல்படுங்கள்!




பாசுமதி அல்லாத அரிசிக்குத் தடை விதித்துள்ள நிலையில், வேறு அரிசி வகைகளின் இறக்குமதியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அரிசியைப் பற்றிய அடிப்படை விஷயங்களைத் தெரிந்துக்கண்டு செயல்படுவதன் மூலம் நீங்கள் உங்கள் பங்கை ஆற்றலாம்:

- உங்களின் உணவு தேர்வுகளை **மாற்றிக்கொள்ளவும்**.
- உங்களுக்கத் தேவையானதை மட்டும் **வாங்கவும்**
- மற்ற அரிசி வகைகளைத் **தேர்ந்தெடுக்கவும்**





## ஹெல்த்சர்வின் #MigrantMatters (வெளிநாட்டவர்களின் விஷயங்கள்)

ஹெல்த்சர்வின் சுகாதாரக் கல்வித் தொடர், **#MigrantMatters (வெளிநாட்டவர்களின் விஷயங்கள்)** மற்றும் உங்களை எவ்வாறு சிறப்பாகக் கவனித்துக்கொள்ளலாம் என்பதைப் பற்றி மேலும் அறிய கீழே உள்ள இணைப்புகளைக் கிளிக் செய்யவும்!




- பேஸ்புக் (Facebook)
- டிக் டாக்( TikTok)
- வலைஒளி (YouTube)
- ஹெல்த்சர்வின் பன்மொழி உதவி இணையவாசல்



வெளிநாட்டு ஊழியர்கள் யாரிடமாவது பேச விரும்பினால் அல்லது அவர்களுக்கு உதவி தேவைப்பட்டால், **3129 5000 என்ற எண்ணில் ஹெல்த்சர்வின் 24 மணிநேர உதவி எண்ணை** அழைக்கவும்.

# நிகழ்வின் சிறப்பம்சங்கள்






## தேசிய தின விழா!

தேசிய தினத்தைக் கொண்டாடும் வகையில், நமது வெளிநாட்டு ஊழியர்களுக்குக் காக்கி புக்கிட் பொழுதுபோக்கு நிலையங்களில் கேளிக்கை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

விளையாட்டுகளில் பங்கேற்று, பஞ்சு மிட்டாய் போன்றவற்றை சுவைத்ததோடு, கவர்ச்சிகரமானப் பரிசுகளையும் வென்றனர்! கீழே உள்ள எங்கள் பேஸ்புக் (Facebook) பக்கத்தைப் பின்தொடர்வதன் மூலம் மேலும் பொழுதுபோக்கு நிலையங்களின் நடவடிக்கைகள் பற்றி அறிந்துக்கொள்ளுங்கள்

## தெமாசெக் தொடக்கக் கல்லூரிக்கு வருகை








வெளிநாட்டு ஊழியர்கள் குழு தெமாசெக் தொடக்கக் கல்லூரிக்குச் சென்றது. அங்கு அவர்கள் விளையாட்டுகள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் நமது மாணவர்களுடன் ஈடுபட வாய்ப்பு கிடைத்தது.

இந்த வருகை எமது மாணவர்களுக்கு, வெளிநாட்டு ஊழியர்களின் கடின உழைப்பிற்குத் தங்களின் பாராட்டுக்களை வெளிப்படுத்த வாய்ப்பையும் வழங்கியது.

## வெளிநாட்டு ஊழியர்களின் கலைக் கூடத்திற்கு உல்லாசப் பயணம்

ஃபிரண்ட்ஸ் ஆஃப் ஏஸ் (FACE) தொண்டூழியர்கள் வெளிநாட்டு ஊழியர்கள் கலைக் கூடத்தைப் பார்வையிட்டனர். அதன் ஒரு பகுதி கொவிட்-19 தொற்றின் உச்சத்தின் போது நமது வெளிநாட்டு ஊழியர்களின் பங்களிப்பைக் காட்சிப்படுத்தியது.

இவ்வருகையின் மூலம், சிங்கப்பூருக்கும் வெளிநாட்டு ஊழியர்களுக்கும் உதவுவதற்காக எங்களின் ஃபிரண்ட்ஸ் ஆஃப் ஏஸ் (FACE) தொண்டூழியர்கள் மேற்கொண்ட முயற்சி தங்களுக்கு அர்த்தமுள்ளதாக அமைந்தது என்று நம்புகிறோம்.




இங்கே கொடுக்கப்பட்டுள்ள கியூ ஆர் குறியீட்டை ஒளிவருடுவதன் மூலம் எங்கள் ஃபேஸ்புக் நிகழ்வுப் பக்கத்தில் நீங்கள் பங்கேற்கக்கூடிய பல்வேறு **நேரடி மற்றும் இணைய நடவடிக்கைகளைப்** பற்றி மேலும் அறியவும்

*சமீபத்திய செய்திகள் மற்றும் தகவல்களைப் பெற எங்கள் அதிகாரப்பூர்வ ஒளிவழிகளில் எங்களைப் பின்தொடரவும்!*

[ACE Group's Facebook page]

[ACE Group's TikTok channel]

# வன்முறையில் ஈடுபடுமுன் ஒருமுறைக்கு இருமுறை யோசியுங்கள். இல்லையெனில் நீங்கள் உங்கள் ஊருக்குத் திருப்பி அனுப்பப்படலாம்!



2022 இல், ஒரு வெளிநாட்டு ஊழியர் தனது அறை தோழனுடன் பெரிய வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.








நொடி பொழுது கோபத்தில், வெளிநாட்டு ஊழியர் **இரண்டு இறைச்சி வெட்டும் கத்திகளை** எடுத்து தனது அறை தோழரைத் **தாக்கினார்**. அந்த நண்பர் பலத்த காயமடைந்தார்.

தனது அறை தோழரைத் தாக்கிய வெளிநாட்டு ஊழியருக்கு **15 வார சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் அவரது சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.**

## எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ளவும்:



- **வன்முறை பிரச்சனையைத் தீர்க்காது**
- **வன்முறை பாதிக்கப்பட்டவரைத் காயப்படுத்துவது மட்டுமல்லாமல், உங்களையும் சிக்கலில் மாட்டிவிடும்**
- **வன்முறையில் ஈடுபடுமுன் ஒருமுறைக்கு இருமுறை யோசியுங்கள்**